Registered as a news paper. பக்கங்கள்: எட்டு விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**Computer Hardware Work Shop**

**2 ஆவது பிரிவு**

- உங்களுக்கான குறுகியகால பயிற்சிநெறி...
- அதி நவீன கணினிகளில் செய்முறைகள்...
- எமது நிறுவனத்திலேயே தொழில்சார் வசதிகள்...

ஆரம்பம் - 05.06.2006 காலை 11.00 மணி

பதிவுகளுக்கு முந்துங்கள்.

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 21 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 07 (04.06.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 246

## இ.போ.ச. ஊழியர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச் சேனையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கறுவன் கேணியைச் சேர்ந்த வைத்திலிங்கம் விஜிதரன் (வயது 26) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவத்தின்போது அவருடன் உரையாடிக் கொண்டிருந்த வாழைச்சேனையைச் சேர்ந்த பேதாம்பரம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பிரதிநிதிகள் இன்று நோர்வே பயணம்

கிளிநொச்சி —

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடுகள் தொடர்பான மாநாட்டில் பங்கேற்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இன்று ஒஸ்லோவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று மதியம் கிளிநொச்சியிலிருந்து ஹெலி மூலம் கொழும்பு செல்லும் இவர்கள் இன்றைய தினமே நோர்வேக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உட்பட மேலும் சிலர் இந்தக் குழுவில் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த மாநாட்டில் அரச தரப்பில் மூவரடங்கிய குழுவொன்று பங்கேற்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கொகன்ன தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் ஜனாதிபதியின் ஆலோசகர் கொமின் தயாசிறி மற்றும் சானக ஜெயசேகர ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

## நாகர்கோவில் நோக்கி யுத்த தளபாடங்கள்!

கொழும்பு —

நாகர்கோவில் படைத்தளத்தை நோக்கி கனரக யுத்த தளபாடங்கள் மற்றும் பெருமளவிலான படையினர் நகர்த்தப்பட்டு வரும் அதேவேளை, அம்புலன்ஸ் மற்றும் காயமடைவோரைத் தூக்கிச்செல்லும் கட்டில்கள் என்பன அம்பன் படைத்தளத்தை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றன.

நாகர்கோவில் படைத்தளத்துக்கு அடுத்த பின்தளமாக அம்பன் படைத்தளம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. நாகர்கோவில் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினால் அதனை உடனடியாக முறியடிப்பதற்கான (08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையிடாது!



## பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

சிங்கப்பூர் —

இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும். ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் இராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ இந்தியா எக்காரணம் கொண்டும் நேரடியாகத் தலையிட மாட்டாதென இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற உயர் மட்டப் பாதுகாப்பு மாநாட்டின் பின்னர் இடம்பெற்ற கேள்வி, பதில் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கிளைமோர்; சிப்பாய் பலி, ஒருவர் காயம்!

கொழும்பு —

மணலாற்றில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுநண்பகல் 12.10 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

## மன்னாரில் கிரனேட் தாக்குதல்;

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

# மன்னாரில் கிரனேட் தாக்குதல்; 2 பொலிஸார், சிப்பாய் படுகாயம்!

## படையினரின் சூட்டுக்கு பொதுமகன் பலி!

மன்னார் —

மன்னார் பொது விளையாட்டரங்க சந்தியில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது நேற்றிரவு 7.05 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து படையினர் மேற் கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் ரத்னாயக்க (வயது 32), சில்வா (வயது 36) ஆகிய இரண்டு பொலிஸாரும், உபாலி ஜெகத் (வயது 42) எனும் இராணுவச் சிப்பாயுமே காயமடைந் தவர்களாவர்.

இவர்கள் மூவரும் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


இதேவேளை - படையினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உப்புக் குளத்தைச் சேர்ந்த ஹூசைன் என்ற பொதுமகன் உயிரிழந்தார்.

இவரது சடலம் மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மோ)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசுமீது கடும் அழுத்தம் தேவை

## புலிகளின் பயண நோக்கம் குறித்து புலித்தேவன்

கிளிநொச்சி —



இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் தீவிரமான அழுத்தத்தைப் பிரயோகித்து, தீர்வொன்றை எட்டுவதற்கு நிர்ப்பந்திக்காதவரை - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கும் முயற்சியாகவே புலிகளின் ஒஸ்லோ பயணம் அமையவுள்ளதாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை அரசாங்கங்களுடன் ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்களையும், ஜெனிவாவில் ஒரு சுற்றுப் பேச்சையும் நடத்திய போதி லும், அந்தப் பேச்சுக்களில் ஏற்றுக்கொண்ட வாக்குறுதிகள் எதனையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. நிறைவேற்றுவதற்கான மனநிலையும் அதற்கு இல்லை. (08 ஆம் பக்கம் பார்க்க)

# எழுதுமட்டுவாளில் கிளைமோர்: சிப்பாய் பலி, இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம் —

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

முகமாலையின் வடக்கு சோதனைச் சாவடியில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் படையினரின் வாகனத்தில் இந்தக் கிளைமோர் பொருத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ9 வீதியின் குடியிருப்புகள் அற்ற பகுதியான மிருசுவில் மற்றும் முகாமாலைக்கிடையேயான பகுதியில் உள்ள எழுதுமட்டுவாளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த இரண்டு இராணுவத்தினரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



பிரிட்டன் கடற்படைத்தளபதி அட்மிரல் ஜொனதன் பான்ட் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போது.

# இரண்டு தமிழ் இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு —

வாழைச்சேனையில் இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் களுவன்கேணியைச் சேர்ந்த டி.விமலேந்திரன் (வயது 34), எம்.சித்திரவேல் (வயது 38) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றிரவு 10.15 மணியளவில் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த இந்த இரண்டு இளைஞர்களுமே படுகொலை செய்யப்பட்டனர். வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

## யாழ். மாநகர சபை

### வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிட்ட வீதி வேலைக்காக யாழ்.மாநகர சபையில் பதிவு செய்துள்ள இக்ராட் பதிவுடன் கூடிய இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் செல்லுபடியாகும் உறுப்புரிமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:-
09.06.2006 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:-
12.06.2006 நண்பகல் 12.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி:-
12.06.2006 பி.ப 3.00 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் 'வீதி செப்பனிடுவதற்கான கேள்வி'என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு, பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இந்து விடுதியில் செயற்பட்டுவரும் வீதி வேலைப்பகுதியில் அறிந்துகொள்ள முடியும்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு பணம் (ரூபா) | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பு பணம் வற் வரி உட்பட (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | புதிய செபஸ்தியான் வீதி | M9 | 1500/= | 1000/= |
| 02 | ஈச்சமோட்டை கடற்கரை வீதி | M9 | 4600/= | 1000/= |
| 03 | மணிக்கூட்டு வீதி | M8 | 14900/= | 1000/= |
| 04 | புனித திருக்கன்னியர்மடம் வீதி | M9 | 3125/= | 1000/= |
| 05 | ஆஸ்பத்திரி வீதி | M6 | 12000/= | 1000/= |
| 06 | சேர்.துரைச்சாமி வீதி | M9 | 2200/= | 1000/= |
| 07 | வாளிக்கிணத்தடி வீதி | M9 | 2000/= | 1000/= |
| 08 | புனித அந்தோனியார் வீதி | M9 | 2450/= | 1000/= |
| 09 | சிவன் பண்ணை வீதி | M9 | 4700/= | 1000/= |
| 10 | சுவாமியார் வீதி | M9 | 3800/= | 1000/= |
| 11 | முஸ்லீம் பாடசாலை வீதி | M7 | 2000/= | 1000/= |
| 12 | கன்னாதிட்டி வீதி | M9 | 1750/= | 1000/= |
| 13 | செட்டி வீதி 1ம் ஒழுங்கை | M9 | 1750/= | 1000/= |
| 14 | நாவாந்துறை 3ம் ஒழுங்கை | M9 | 2250/= | 1000/= |
| 15 | பண்டாரக்குள வீதி -சங்கிலியன் வீதி இணைப்பு ஒழுங்கை | M9 | 1250/= | 1000/= |


குறிப்பு:
1. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்பொது தாங்களோ அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரோ கேள்விச் சபைக்கு சமுகங்கொடுக்க அனுமதிக்கப்படும்.
2. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 2 மாதங்களுள் (31.07.2006ஆம் திகதிக்கு முன்னர்) நிறைவுறுத்தி ஒப்படைக்கவேண்டும்.

சீ.வீ.கந்தையா சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை.

[C/5373]

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
02.06.2006

# 231 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை அணி



லண்டன் —

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ரிடின்பிறிஜ் மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணி 231 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் வண்டோட் - தரங்க ஜோடி களமிறங்கியது. எனினும் இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

சென்ற டெஸ்டில் சதமடித்துக் கலக்கிய வண்டோட் 1 ஓட்டத்தை மாத்திரமே பெற்ற நிலையில் பவிலியன் திரும்பினார்.

அடுத்து சங்ககார - தரங்கவுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி தங்களுடைய நிதானமான இணைப்பாட்டத்தின்மூலம் ஸ்கோரை 84 வரை உயர்த்தியது.

இந்த நிலையில் 36 ஓட்டங்களை எடுத்த சங்ககார, பிளின்ரொப்பின் பந்தை ஜோன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து ஜெயவர்த்தன களமிறங்கினார். எனினும் சற்று நேரத்தில் தரங்கவும் ஆட்டமிழக்க நேரிட்டது.

34 ஓட்டங்களை எடுத்த தரங்க, ஹொகாட்டின் பந்தை ஜோன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 85 ஆக இருந்தது.

இந்த நிலையில் ஜெயவர்த்தன ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்க - தொடர்ந்து களமிறங்கிய டில்சான் 0, பலத்த சர்ச்சைகளுக்குப்பின்னர் அணிக்கு மீள அழைக்கப்பட்ட ஜயசூரிய 4, கப்புகெதர 14, மஃரூப் 13 என குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

139 ஓட்டங்களை எடுப்பதற்குள் 8 விக்கெட்டுக்களை இழந்து இலங்கை அணி பரிதவித்தபோது பின்வரிசை வீரர்களாகவும், பந்து வீச்சாளர்களாகவும் கலக்கும் வாஸ் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும், மலிங்க 21, முரளி 33, ஓட்டங்களையும் எடுத்து இலங்கை அணியின் ஸ்கோரை ஓரளவு கௌரவமான நிலைக்கு உயர்த்தினர்.

இந்த நிலையில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் லூவிஸ், பிளின்ரொப் தலா 3 - ஹொகாட், பிளங்கெட் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து இங்கிலாந்து அணி ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஆரம்ப வீரர்களாக டிரெஸ் கொதிக் - ஸ்ரரஸ் ஜோடி களமிறங்கியது.

ஸ்கோர் 25 ஆக இருந்தபோது 7 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற ஸ்ரரஸ், வாஸின் பந்தில் போல்டானார்.

அடுத்து குக் களமிறங்கினார். எனினும் ஸ்கோர் 39 ஐ எட்டியபோது 24 ஓட்டங்களை எடுத்த டிரெஸ் கொதிக் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து பீற்றர்சன் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் வாஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த
பட்டியல் (புதிய வெளியீடு)
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்
குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
அஜித்குமார், சதா
திருப்பதி
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
சூரியா - ஸ்ருதிகா மற்றும் விஜயகுமார் நடித்த
ஸ்ரீ
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# எப்போது காண்போம் இனி...?



மலர்வு
28.08.1932

உதிர்வு
01.06.2006

அமரர்
## இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்
(பிரபல தொழில் அதிபரும், ஆர்.வி.ஜி. பீடி கம்பனி, மருந்தகம் ஆகியவற்றின் உரிமையாளரும்)
அவர்கள்

வல்வெட்டித்துறை மண் ஈன்றெடுத்த வள்ளல்!
வரமளிக்கும் முத்துமாரி அம்மனின் தொண்டன்!
அல்லலால் தவிக்கும் ஆருயிர்க்கு அருளாளன்!
ஆர்.வி.ஜி நிறுவனத்தின் உயரிய அச்சாணி!
நல்லவர் இதயங்களில் நடமாடும் தெய்வம்!
நானிலத்தில் பலபேர்க்கு வாழ்வளித்த நல்லான்!
இவ்வுலகில் எழுபத்துநான்கு அகவையை நிறைத்தே
ஈசனடி இணைந்த துயர் எமையின்று வாட்டும்!
ஏழைகள் வாழ்வுபெறத் தொழில்தந்த அன்பன்!
ஈடில்லாத் தாபனத்தை இயக்கிநின்ற பெரியோன்!
நாளும் பல அரியபணித் தருமத்தால் உயர்ந்தோன்!
நமைப்பிரிந்து சென்றது ஏன்? விதிதானோ அறியோம்!
பெறற்கரிய தலைவா உன் பெருந்நினைவே நிலைக்கும்!
பிறப்பெடுத்து மீண்டிடுக! பெருந்துன்பம் நீங்க!

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆர்.வி.ஜி. பீடி நிறுவனம்,
ஆர்.வி.ஜி. மருந்தக
ஊழியர்கள்.

[2292]

# ஐரோப்பிய ஒன்றிய தடையை நீக்குவதற்கு புலிகளே நடவடிக்கை எடுக்க வேண்டும்

## என்கிறது அரசாங்கம்



கொழும்பு—

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையை நீக்குவதற்கு அவர்களே நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அமைச்சர் கெகலிய ரம்புக் வெல இது தொடர்பாகமேலும் தெரிவித்துள்ளதாவது -


விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகம் தடைசெய்த போதிலும், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு எந்தவிதமான தடைகளும் ஏற்படவில்லை.

எனவே, சமாதானத்துக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள கண்காணிப்புக் குழுவின் மாநாட்டில் பங்கு பற்றச் செல்லவுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பூரண பாதுகாப்பு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆயுதங்கள் களைந்த பின்னரே விடுதலைப்புலிகளுடன் பேச்சு

## ஜே.வி.பி.தெரிவிப்பு



கொழும்பு—

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக - முப்படைகளுக்கும், பொலிஸாருக்கும் நவீன ஆயுத தளபாடங்களை வழங்கித் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

புலிகளுடனான எந்தப் பேச்சுக்களும் அவர்களிடமிருக்கும் ஆயுதங்களைக் களைந்த பின்னரே மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கருத்துத் தெரிவிக் கையிலேயே ஜே.வி.பி யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

# தமிழ் கூட்டுறவு அதிகாரி இராணுவத்தால் கடத்தல்

## எழிலன் முறைப்பாடு

திருகோணமலை—


தமிழ்க் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி கஜேந்திரன் இராணுவத்தால் கடத்தப்பட்டுள்ளதாகத் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இது குறித்து திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மாவட்ட கண்காணிப்புக்குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மூதூர் கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சர்வதேச உணவுத் திட்டத்தின்கீழ் உலர் உணவுப் பொருட்களை வழங்கிய தமிழ்க் கூட்டு றவு அபிவிருத்தி அதிகாரியைக் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமைச்சேர்ந்த படையினர் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் கடத்திச் சென்றனர்.

இந்தக் கடத்தலானது - இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தை மட்டும் பாதிக்கவில்லை. இடம் பெயர்ந்த மக்களுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவும் செயற்பாட்டையும் பாதித்துள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இடைக்காடரின் உண்ணாவிரதத்தில் பெண்ணும் இணைந்து கொண்டார்







கொழும்பு—

பிரித்தானியாவின் நாடாளுமன்ற முன்றலில் கரோ கவுன்ஸிலர் தயா இடைக்காடர் ஆரம்பித்துள்ள 101 மணி நேர உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாகவும், தமிழ் மக்களின் அவலங்களை உலகுக்கு உணர்த்தவும் - 5 பிள்ளைகளுக்குத் தாயாரான ஈழத்து பெண்மணியொருவரும் நீர், ஆகாரம் எதுவுமின்றி தனது சுயவிருப்பின் பேரில் போராட்டத்தில் குதித்துள்ளார்.

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு தவராணி என்பவரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

# வெளிநாட்டு சக்திகளின் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாதாம்

## என்கிறார் தம்பர அமிலதேரர்

கொழும்பு—

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

அத்துடன் புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருப்பதன் மூலமாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிட்டதென்று நினைத்து விட முடியாது என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் கலாநிதி தம்பர அமிலதேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கம் அல்ல. அவர்கள் ஒரு பயங்கரவாத இயக்கமாகும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை மூலமாக தெட்டத் தெளிவாகின்றது. இந்தத் தடைமூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிட்டதாக நினைத்து விடக்கூடாது.

அரசாங்கம் பிரிவினைவாதத்தைச் சிறைப்படுத்தி விட்டது என்றே கூறவேண்டும். அவ்வாறானதொரு பொன்னான சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும்.

இணைத்தலைமை நாடுகள் விடுத்துள்ள கூட்டறிக்கை அபாயகரமானது என்பதனால் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்காக வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதை ஒரு போதும் அனுமதிக்கமுடியாது.

யசூஷி அகாஷிக்கு இலங்கையின் வரலாறு தெரியாது. அதனால் தான் படையினரால் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று கூறிவருகிறார்.

நாட்டின் இறைமையைப் பாதுகாத்த, பாதுகாத்துக் கொண்டிருக்கும் எம்மால் நல்லதொரு முடிவை எட்ட முடியும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட இந்த நாட்டில் வாழும் சகலரும் சமாதானமாக வாழ்வதற்கான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். சிலர் அரசியல் இலாபத்துக்காக அரசாங்கத்தின் வெற்றிப்பாதையைத் திசை திருப்புவதற்கு முயற்சி செய்கின்றனர்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் வன்மையானதாக இல்லை. அதற்கு சர்வதேச சமூகம் இடம் கொடுக்கவில்லை. அற்ப சொற்ப நிதியுதவிக்காக எமது நாட்டின் இறைமையைக் காட்டிக் கொடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு கடற் பகுதிகளில் சிங்கள மீனவர் அத்துமீறல் அதிகரிப்பு

கொழும்பு—

வடக்கு - கிழக்குப் பகுதி கடற்பரப்பில் கடற்படையினரின் துணையுடன் சிங்கள மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

வடமராட்சி, மயிலிட்டி, காங்கேசன்துறை கடற்பரப்பில் சிங்கள மீனவர்கள் இந்த மீன்பிடித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களுக்கு கடற்படையினர் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றனர்.

ஆனால், வடமராட்சி பகுதி மீனவர்கள் கரையில் இருந்து 3 கடல் மைல் தொலைவுப் பகுதிக்குள் மட்டுமே மீன்பிடிக்க முடியும் என்று கடற்படையினர் தொடர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக கடற்படையினரின் துணையுடன் முல்லைத்தீவு செம்மலைக் கடற்பரப்பில் சிங்கள மீனவர்கள் சுருக்கு வலை மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கடற்பகுதிகளிலும் கடற்படையினரின் துணையுடன் சிங்கள மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் செயற்பாட்டால் வறிய தமிழ் மீனவர்கள் பெரும் சிரமங்களைத் தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர்.

# லண்டன் கொலைச் சூத்திரதாரி இலங்கையில் கைது செய்யப்பட்டார்!

கொழும்பு—

லண்டனில் தமிழ் இளைஞர் ஒருவரை கொலை செய்து, மற்றொரு இளைஞரைக் கொல்ல முயன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பிவந்து இலங்கையில் வாழ்ந்துவந்தார் எனக்கூறப்படும் தமிழ் இளைஞர் சிலாபம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு, பொலிஸ் பகுதியில் அமைந்துள்ள சர்வதேச பொலிஸ் பணியகப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாரே சிலாபத்துக்குச் சென்று இவரைக் கைது செய்தனர். சிவப்பிரகாசம் ராஜேஸ்கண்ணா என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் நீதிபதி உபாலி அபேவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

லண்டனில் 2004 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி மகேஸ்வரன் என்ற இளைஞரை மேலும் 12 நபர்களுடன் சேர்ந்து கிரிக்கெட் மட்டையால் அடித்துக்கொலை செய்தார் என்றும்,

2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி மணிராஜ் மணியரசன் என்பவரைத் தாக்கிக் கொலை செய்ய முயன்றார் என்றும், இவர் மீது குற்றங்கள் சுமத்தி லண்டன் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் லண்டனிலிருந்து வெளியேறி சிலாபத்தில் தங்கி வாழ்ந்த இவர் ''இன்டர்போலின்'' வழிகாட்டலில் கைதுசெய்யப்பட்டார் எனக்கூறப்படுகிறது.

# முன்பள்ளிக்குரிய தளபாடங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது!





கிளிநொச்சி

கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள முன்பள்ளிக்கு தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

ஜெயந்தி நகர் கிராமத்தில் இயங்கி வரும் முன்பள்ளியில் காணப்பட்ட தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாகவே தளபாடங்கள் வழங்கப்பட்டன.

தளபாடங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் விசேட கண்காணிப்பாளர் யோ.நிலா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, ஐக்கிய நாடுகள் சபை - கபிற்றர் நிறுவனப் பிரதிநிதி பா.முரளி, ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் ச.சந்திரசேகர், கிராம சேவையாளர் நீ.சிறிபத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு தளபாடங்களை வழங்கினர்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன ஆரம்பக்கல்வி ஆலோசகர் செ. மகேஸ், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசா, கபிற்றர் நிறுவனப் பிரதிநிதி பா.முரளி, வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஜெயா தம்பையா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இந்தத் தளபாடங்கள் வழங்கும் நிகழ்வுக்கான நிதிப்பங்களிப்பை ஐக்கிய நாடுகள் சபை கபிற்றர் நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் முன்பள்ளி, ஆசிரியர்கள், சிறார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சிரமதானம்

வட்டக்கச்சி

முழங்காவில் மகாவித்தியாலய சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மக்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு சிரமதானத்தில் ஈடுபட்டனர். (09)

## பொதுக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன

வட்டக்கச்சி

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி கிராமத்தில் போரூட், யு. என்.எச்.சி.ஆர் நிறுவன நிதியுதவியுடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் ஆறு பொதுக்கிணறுகள் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பூநகரி - முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி தலைமையில் போரூட் நிறுவன பிரதிநிதிகள், பொது அமைப் புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (09)

## கப்டன் யோகன் பயிற்சி பாசறையில் மக்கள் படைக்கு இராணுவ பயிற்சி!

வட்டக்கச்சி

கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் மக்கள் உள்ளகப் படைக்கான இராணுவப் பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை மல்லாவிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - ஈகச் சுடரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தொடர்ந்து பொதுச்சுடரை பொருண்மிய மேமபாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் ஏற்றினார்.

கப்டன் யோகனின் திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து பயிற்சிப் பாசறையில் 300 பேர் கொண்ட அணிக்கு முறியடிப்பு சமர் பொறுப்பாளர்களில் ஒருவரான யாழ்நம்பி பயிற்சிகளை வழங்கினார். (09)

## மாணவர் எழுச்சி நாளை சிறப்பாக நடத்த ஏற்பாடு!

வட்டக்கச்சி

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழீழ மாணவர் எழுச்சிநாளை சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன்படி நாளை மறுதினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திலும் - புதுக்குடியிருப்பு மாவீரர் விளையாட்டு மைதானத்தில் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் 3 மணிக்கு மாணவர் எழுச்சி நாட்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்துதல், மாணவர் எழுச்சி அறிக்கை பிரகடனம் மற்றும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

## இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு!

வட்டக்கச்சி

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் புதிய இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா - கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, தமிழீழ கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருள்மாஸ்ரர், கிளிநொச்சி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், யுனப்ஸ் நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த இருமாடிக் கட்டடம் யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் யுனப்ஸ் நிறுவனத்தால் 54 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

## மகா கும்பாபிஷேகம்

வட்டக்கச்சி

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (09)

## கிராமிய புனர்வாழ்வுக் குழு புதிய நிர்வாகிகள் தெரிவு!

வட்டக்கச்சி

கிளிநொச்சி கனகபுரம் கிராம கிராமிய புனர்வாழ்வுக் குழுவின் விசேட கூட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

குழுத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் பிற்பகல் 4 மணிக்கு கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் போர்ப் பிரியன், துணைப் பொறுப்பாளர் சிவநாத், கனகபுரம் கிராம அலுவலர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க மாதர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் தலைமையில் கிராமிய புனர்வாழ்வுக்குழு நிர்வாகத்தினர் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக எஸ்.சிவதாசன், உபதலைவராக தயாநந்தினி, செயலாளராக நடராசா, உபசெயலாளராக ஜெயந்தினி மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (09)

## தற்காப்பு பயிற்சிகள் ஆரம்பம்!

வட்டக்கச்சி

கடற்கரும்புலி ஜெகநாதன் பயிற்சிப்பாசறையில் முதலாவது அணிக்கான தற்காப்பு பயிற்சிகள் ஆரம்பமாகின.

பயிற்சி ஆசிரியர் ராஜ் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கறுக்காய் தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.செல்வராசா ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை பூநகரி அரசியற் துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஏற்றியதைத் தொடர்ந்து பயிற்சி ஆசிரியர் ராஜ் தலைமையில் பயிற்சிகள் ஆரம்பமாகின. (09)

வட்டக்கச்சி

உருத்திரபுரம் வடக்கு சக்திபுரம் கிராமத்தில் மாவீரர் சுரேஸ் பயிற்சிப் பாசறையில் கடந்த முதலாம் திகதி தற்காப்புப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது மாவீரர் ஜமுனனின் சகோதரி உ. உதயகுமாரி ஈகச் சுடரை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடிய்ய மாவீரர் சுரேசின் தந்தை அ.கந்தையா ஏற்றினார்.

தலைமையுரையை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு.பிரபலசிங்கம் நிகழ்த்தினார்.

தற்காப்புப் பயிற்சியை சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் செயலாளர் நி.ஜெயந்தன் ஆரம்பித்து வைத்தார். (09)

## சுற்றுச்சூழல் தினப்போட்டி பரிசளிப்பு விழா!

வட்டக்கச்சி

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகத்தால் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தாயக திட்டமிடலுக்கும், மேம்படுத்தலுக்குமான செயலகத்தில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களை இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சூழல் நல்லாட்சி ஆணையகம் கேட்டுள்ளது. (09)

## குடிசைக்குள் பற்றிய தீ குழந்தை உயிரை பறித்தது

வட்டக்கச்சி

எதிர்பாராத விதமாக குடிசையில் பற்றிய தீயால் குடிசைக்குள் உறங்கிக் கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது. இதில் ஜெ. அபிசன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே பரிதாபகரமாக உயிரிழந்தது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

நண்பகல் வேளை குழந்தை குடிசைக்குள் ஏணையில் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அடுப்பிலிருந்து நெருப்பு குடிசைக்குள் பற்றியது. குழந்தையின் தாய் கடைக்குச் சென்றிருந்த வேளை, குடிசையில் தீ பற்றியதைக் கண்ட அயலவர்கள் அதற்குள் இருந்த குழந்தையை சிரமத்தின் மத்தியில் மீட்டனர்.

உடனடியாக குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்த போதும், சிகிச்சை பயனளிக்காமல் குழந்தை உயிரிழந்தது.

குடிசை முற்றாக எரிந்ததுடன், அதற்குள் இருந்த உடைமைகளும் எரிந்து நாசமாகின. (இ)

## கனகாம்பிகை குளத்தில் கட்டுமானப் பயிற்சி நிறைவு

கிளிநொச்சி

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் மக்களுக்கான கட்டுமானப் பயிற்சி நிறைவுவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

போராளி மதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கனகாம்பிகைக் குள கிராம அலுவலர் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை போராளி பரணி ஏற்றினார்.

நிகழ்வின் சிறப்புரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அடிப்படை கட்டுமானப் பயிற்சியை நிறைவு செய்த மக்களுக்கான பயிற்சி சான்றிதழை க.வே.பாலகுமாரன், திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் றஞ்சன் ஆகியோர் வழங்கினர்.

# தருண - அருண திட்டத்தின் கீழ்
# நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம்—

வேலையற்ற பட்டதாரிகளைத் தெரிவு செய்து பயிற்சியளிக்கும் 'தருண அருண' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் விபரங் களை யாழ். செயலகம் வெளியிட்டுள் ளது.

தருண அருண திட்டத்துக்கு ஏற் கனவே விண்ணப்பித்தவர்களுக் கான நேர்முகப் பரீட்சை நாளை காலை 9.30 மணிக்கு யாழ். செயல கத்தில் இடம்பெறுமென அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டவர்களின் விபரங்கள் பின்வரு மாறு -

கே.கௌசல்யா (அரியாலை), எம்.சிவஜங்கரன் (வட்டுக்கோட்டை), பி.மதியழகன் (அரியாலை மேற்கு), ஆர்.சிவரஞ்சன் (யாழ்ப்பாணம்), பி.சுஜாதன் (துன்னாலை), கே.பிரியா (காங்கேசன்துறை), பி.பகீர்ரதன் (கைதடி), ஆர். திரேஸ்வரி (சுன்னா கம்), ரி. ஜெயவதனி (மாசாி, வரணி).

வி. கேதுராணி (புலோலி தெற்கு), பி.கஜேந்திரன் (மாதகல்), கே.கார்த் திகா (கரணவாய் தெற்கு), ஜி.நிரஞ் சன் (சங்கத்தானை),ஆர். சி.மேனகா (உரும் பிராய் கிழக்கு), கே.சிவநிஷா (ஊர்காவற் துறை), ஏ.பிரியதர்சினி (தும்பளை), பி.பிறேமலதா (சாவகச் சேரி).

எம்.றீகன் (நல்லூர்), என்.விது சன் (இளவாலை), ரி.பிரதீபன் (பருத் தித்துறை), எஸ்.லோகீஸ்வரன் (சுன் னாகம்), எஸ்.ஞானதீபன் ( நீர்வேலி வடக்கு), எஸ்.சுவர்ணா (வட்வெட் டித்துறை), கே.நித்தியகலா (நல் லூர்), ஆர்.வித்தியா (யாழ்ப்பாணம்), ரி.லதா (காரைநகர்), ஏ.சசி கலா (ஏழாலை).

எஸ்.மயூரிகா (திருநெல்வேலி வடக்கு), கே.சிவகங்கா (யாழ்ப்பா ணம்), சுகிர்தன் அழகானந்தம் (யாழ்ப் பாணம்), ஏ.செந்தூரன் (காங் கேசன்துறை), எம்.வானதி (காங்கே சன்துறை), பி.அஜந்தா (சுதுமலை வடக்கு), ரி.மிதிலா (ஏழாலை மத்தி, ஏழாலை), வி.முகுந்தன் (ஆனைப் பந்தி), எஸ்.ஜெ சாந்தி (அரியாலை), என்.தசரதன் (முள்ளியவளை), என்.நிறோகினி (வவுனிக்குளம்).

# சமுர்த்தி கொடி வாரம்



யாழ்ப்பாணம் —

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத் தை முன்னிட்டு சமுர்த்தி அதிகாரசபை யால் வருடந்தோறும் மேற்கொள் ளப்பட்டுவரும் சமுர்த்தி கொடி வாரம் இந்த ஆண்டும் கடந்த 31 ஆம் திகதி முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை யும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

10 ரூபா பெறுமதியான இந்தக் கொடிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில் பிரதே சத்தின் சமுர்த்தி பயனாளிகளுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

அத்துடன், அதிக தொகைக்கு கொடிகளை விற்பனை செய்யும் சங்க உறுப்பினர்களுக்குப் பரிசு களும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

# பத்திரிகையாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம் —

வடக்கு - தெற்கு பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்று எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் கொழும்பு சினமன் திரான்ட் ஹோட்டலில் இடம்பெற வுள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் பங்குபற்ற விரும்பும் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், சுயாதீனப் பத்திரிகையாளர்கள் தங்கள் பெயர் களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் (MRTC) பதிவு செய்யலாம்.

தங்குமிட, பிரயாண ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். முதல் பதிவை மேற்கொள்ளும் 25 பேருக்கே இந்த ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இணைப்பாளர் ரூபன் மரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

# நெடுந்தீவில் தரைதட்டிய இந்திய இழுவைப்படகு

நெடுந்தீவு—

இந்திய இழுவைப்படகு ஒன்று நான்கு மீனவர்களுடன் கடும் காற்று மற்றும் கடற்கொந்தளிப்புக் காரண மாக நெடுந்தீவு வெல்லைக் கடற் பகுதியில் தரை தட்டியுள்ளதுடன், படகும் சேதமடைந்துள்ளது. மீனவர் கள் நால்வரும் நெடுந்தீவுப் பிரதேச பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதி காலை தரைதட்டிய படகில் இருந்த மீனவர்களில் இருவர் நெடுந்தீவு மீனவர்களூடாகப் பொலிஸாருக் குத் தகவல் தெரிவித்ததையடுத்து, பொலிஸ் நிலைய அதிகாரி விரைந்து நடவடிக்கை எடுத்த இந்திய மீனவர் களுக்கான சகல உதவிகளையும் வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை பொலிஸ் உயரதி காரிகளுடன் தொடர்புகொண்டு இந் திய மீனவர்களை மீளவும் இந்தியா வுக்கு அனுப்புவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன எனப் பொலிஸ் நிலையத் தக வல்கள் தெரிவித்தன. (113)

# வசதிகள் செய்து தரப்பட்டாலேயே புதிய இடத்தில் வியாபாரம் செய்வோம்

## நடைபாதை வியாபாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

நடைபாதை வியாபாரிகளுக் கென மாநகரசபையால் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதிகளில் வசதிகள் செய்யப்படாமையால் தாம் அங்கு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் உள்ளதாக முனீஸ்வரன் வீதி நடைபாதை வியா பாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வியாபாரிகள் மேலும் கூறுகையில் -

மாநகர சபையால் புதிதாக றீகல் தியேட்டருக்கு அருகாமையில் முனீஸ் வரன் வீதி வியாபாரிகளுக்கென அமைக்கப்பட்ட கடைத் தொகுதியில் மலசலகூடம் உள்ளிட்ட வசதிகள் எவையும் செய்து தரப்படவில்லை.

அத்துடன் கடைகளும் பூரண மாகச் செப்பனிடப்படவில்லை. இந்த நிலையில் அந்தப் பகுதியில் புதிதாக எமது வியாபார நடவடிக்கைகளைத் தொடர முடியாமல் உள்ளது.

அத்துடன், முன்பு வியாபார நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதி களில் நிறைய குப்பை கூழங்கள் குவிந்து காணப்படுகிறது. இவற்றை அகற்றிப் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதிகளில் வியாபாரங் களைத் தொடர மாநகரசபை ஒத் துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் புதிதாக அமைக்கப் பட்ட கடைத்தொகுதிகளில் வியாபார நடவடிக்கைகளுக்கென 03 மாத முற்பணத்தை நாம் மாநகரசபைக்கு செலுத்தியுள்ளபோதும், தற்போது மீண்டும் முற்பணம் செலுத்துமாறு மாநகரசபை கேட்டுள்ளது.

எனவே, புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதிகளில் வசதிகள் செய்து தரும் பட்சத்தில்தான் நாம் அங்கு வியாபார நடவடிக்கைகளை ஆரம் பிக்க முடியும் என வியாபாரிகள் தெரி வித்தனர்.

# சமுர்த்தி முத்திரைக்கு அரிசி வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்—

குடாநாட்டில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி மட் டும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது தொடர்பான சுற்றுநிருபம் பிர தேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக செயலக வட் டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை காலமும் குடாநாட்டில் சமுர்த்தி நிவாரண முத்திரைக்கு அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருட் கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது சமுர்த்தி நிவாரண முத் திரைக்கு அரிசி மட்டும் வழங்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக உரிய ஆலோசனைகள் பெறப்பட்டு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள் ளது. எனினும், இந்தத் திட்டம் மக்க ளின் ஒத்துழைப்பு கிடைத்தால் மாத் திரமே நிறைவேற்ற முடியுமென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நெடுந்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி

நெடுந்தீவு—

நெடுந்தீவு கிழக்கு புனித அந் தோனியார் ஆலய வருடாந்த திரு நாள் திருப்பலி கடந்த 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது. இதன் முதல் நாள் திருப்பலி இன்று மாலை முதல் இடம் பெறவுள்ளது.

புனித அந்தோனியார் ஆலய திருநாள் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளதுடன், எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நற்கருணை எழுந்தேற்றமும், மறு நாள் செவ்வாய்க்கிழமை காலை திருநாள் திருப்பலியும், கொடியிறக்க மும், திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளது.

இந்த ஆலய திருநாளுக்கென சமய வேறுபாடின்றி நெடுந்தீவி லுள்ள மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்வதுடன், இறுதி நாள் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# தகவல் தொழில்நுட்ப அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்—

மொறட்டுவ பல்கலைக்கழகத் தின் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா அனுமதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சை எதிர் வரும் 18ஆம் திகதி மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

இந்தப் பரீட்சைக்கு யாழ். மாவட் டத்திலிருந்து 78 பேர் விண்ணப்பித் துள்ளனர். அவர்களது விபரங்கள் யாழ்.செயலகத்துக்கு பல்கலைக்கழ கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும், பரீட்சை அனுமதி அட்டைக ளும் பல்கலைக்கழகத்தால் பரீட்சார்த் திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தெனவும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

# தென்னைகளுக்கு குருத்தழுகல் நோய்; செய்கையாளர்கள் பெரும் பாதிப்பு!

சாவகச்சேரி—

தென்மராட்சி பிரதேசத்தில் தென் னங்கன்றுகளுக்கு ஏற்படும் குருத் தழுகல் நோய் காரணமாக இந்தப் பகுதி தென்னை செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் தென்னங்கன்றுகள் வளர்ந்து வரும் காலகட்டத்தில் இந்த குருத்தழுகல் நோயால் தென்னை யின் வளர்ச்சி பாதிப்படைகிறது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகள் காரணமாக தென் மராட்சி பிரதேசத்தில் பல ஆயிரக் கணக்கில் தென்னை மரங்கள் அழி வடைந்தன.

அதனால் பிரதேசத்தில் மீண்டும் தென்னை மரங்களை வளர்த்தெடுக் கும் வகையில் பிரதேச மக்கள் மீள் தென்னைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தென்னங்கன்றுகளுக்கு ஏற் படும் குருத்தழுகல் நோயால் தென்னை செய்கையாளர்களின் உற்பத்தி பாதிப் படைந்துள்ளது.

தென்னங்கன்றுகளுக்கு ஏற் படும் நோய் தொடர்பாக தென்மராட்சி கமநலசேவைகள் நிலையம் நட வடிக்கை எடுக்காமை குறித்து தென் னைச் செய்கையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

# பயிற்சிநெறி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்—

நாளை நடைபெறவிருந்த கிரா மிய சுகாதார தொண்டர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளதாகப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.


# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : கி.லதுர்ஷன்
முகவரி : விசுவமடு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு: ..........



சூப்பன்களர் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்


# தவறிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக் கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி யாழ். போதனா வைத்திய சாலையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள னர்.

*கனகராசா வரலட்சுமி ( இராம* லிங்கம் வீதி, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி), நாகேஸ்வரி சுப்பிரமணியம் (635, அராலி கிழக்கு, அராலி), அபூர் வசிங்கம் தெய்வீகராணி (C.C.T.M பாடசாலை வீதி, இருபாலை கிழக்கு, கோப்பாய்), பாக்கியராசா அம்பிகை பாகன் (சாவற்காடு, ஆனைக் கோட்டை), பெரியான் இராசம்மா (புத்தூர் கிழக்கு), மாணிக்கவாசகர் புனிதவதி (புன்னாலைக்கட்டுவன் வடக்கு), தர்மினி செந்தூரன் (வேலணை மேற்கு) ஆகியோரின் அடையாள அட்டைகளே கிடைக்கப் பெற்றுள்ளன.

# மாவிலி துறைமுகத்தில் வான் திறக்க வேலைகள் ஆரம்பம்

நெடுந்தீவு—

நெடுந்தீவு மாவிலித் துறைமுகப் பகுதியில் படகுகள் தரைதட்டுவதைத் தொடர்ந்து, கடற்பகுதியில் அமைக் கப் பட்ட கடல் தரையின் சுமார் 20 அடி நீளமான பகுதி வான் திறப்பதற் கான வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

துறைமுகத்தினது ஒருவாயி லைத் தவிர ஏனைய பகுதிகள் அடைக்கப்பட்டு இருப்பதால், நீரோட் டம் குறைவதுடன் துறைமுக வாயி னூடாகப் பெருமளவு மணல் உள் வந்து துறைமுக ஆழத்தைக் குறை த்து வருவதாலேயே இவ்வாறு புதி தாக வான் திறக்கப்படுவதாகத் தெரிய வரு கிறது.

இந்த வான் சுமார் 20 அடி அக லமும், 5 அடி ஆழத் துக்குத் திறக்கப் படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (113)

# சரிவுப் பாதையில் செல்லும் தமிழ் மாணவர்களின் கல்வி



மக்களின் சிந்தனையில், செயலில், உளப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான போதனையே கல்வியாகும். அதாவது ஒவ்வொரு மனிதரிடமும் உள்ள பரம்பரை இயல்புகள், பதியப்பட்ட பண்புகள், ஆரம்பத்தில் புகட்டப்பட்ட அறிவு என்பவற்றைச் சரியான முறையில் வெளிக்கொண்டு வருவதற்கான ஒரு ஊடகமே கல்வி எனப்படுகின்றது.

கல்வியின் மூலம் தனி மனிதன் ஆளுமையை வளர்த்துத் தனக்கும், சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கும் நற்பிரஜையாக உருவாகுவதற்கு அந்தக்கல்வி உதவ வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும்.

இவ்வாறு ஒரு சமுதாயத்தினுடைய ஆரோக்கியத்தை பிரதிபலிக்கின்ற சமூக வளர்ச்சிப் போக்கைச் சுட்டிக் காட்டுகின்ற கல்வியின்தரமானது - கடந்த சில ஆண்டுகளாக குறைவடைந்து செல்கின்றமை எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற மிகமுக்கியமான பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுவதுடன், அவர்களின் கற்றல் தொடர்பான செயற்பாடுகள் சீரற்றதாகவும், ஆர்வமின்றியும் இருப்பதை கடந்த கால கல்வி தொடர்பான ஆய்வுகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு கல்விச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து செல்வது சமுதாயத்தின் ஆரோக்கியத்தை மட்டுமன்றி, மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தையும் நிச்சயமாகப் பாதிக்கும்.

எனவே சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற சமூக சேவை நிறுவனங்கள் - மாணவர்களின் கல்வித் தரம் குறைவடைந்து செல்கின்றமை, கற்றலில் ஆர்வமின்மை, எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றை ஆராய்ந்து கல்விச் செயற்பாடுகளை சீராக்க வேண்டியது அவசியமாகும். சமூக சேவை நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் தான் மாணவர்களின் கல்வியை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். இது தொடர்பான பல்வேறு செயற்திட்டங்களை பல சமூக சேவை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் இயங்கி வருகின்ற **REERDO** நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் பல்வேறு செயற்திட்டங்களின் தொடர் நடவடிக்கையாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் **UNICEF** நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒவ்வொரு மாணவருக்குமான கல்வி எனும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்தத் திட்டத்தில் - பாடசாலைக்கு ஒழுங்கற்ற, இடைவிலகிய, பாடசாலை செல்லாத பிள்ளைகளுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை மீளவும் கல்வியில் இணைத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகிறது.

1. *பிள்ளைகள் கல்வி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல்.*
2. *இனங்காணப்பட்ட பிரச்சினைகளை அணுகுவதற்கு திட்டங்களை வடிவமைத்தல்.*
3. *வடிவமைக்கப்பட்ட திட்டங்களை செயற்பாடு களுக்கு ஊடாக நடத்துதல்.*

ஆரம்ப காலங்களில் இலட்சியக் கல்வி, அனுபவக் கல்வி என இரண்டாகப் பிரித்துப் பார்க்கப்பட்ட கல்விக் கொள்கைகள் காலப்போக்கில் வாழ்க்கை நடைமுறையில் ஏற்பட்ட பல்வகை துறைகளின் முன்னேற்றங்கள், சமூக மாற்றங்கள் என்பன கல்வியின் தேவையை அதிகரித்தமையால் கல்விக் கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கிராமங்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்பது பொதுவான கருத்து. எனவே சமூக மாற்றங்களுக்கேற்ப கிராமியக் கல்வியை அபிவிருத்தி காணவைப்பது மிகஅவசியமாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு **REERDO** நிறுவனம் ஆரம்பித்துள்ள ஒவ்வொரு மாணவருக்குமான கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த யாழ். மாவட்டத்திலுள்ள முள்ளி, சாந்தை, சாவற்கட்டு ஆகிய கிராமங்களுக்கூடாக ஏழு பாடசாலைகளை உள்ளடக்கி தனது இலக்கு குழுக்களைத் தெரிவு செய்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நிலவுகின்ற கல்வி தொடர்பான பிரச்சினைகளை அறிவதற்கு பாடசாலை வரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட வரவுக் குழுக்களின் சந்திப்பு மற்றும் கிராம மக்களின் நேரடியான சந்திப்பினூடாகவே இந்தப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்புக்களுக்கூடாக இனங் காணப்பட்டுள்ள கல்வி தொடர்பான பிரச்சினைகள் வருமாறு -

1. *பெற்றோரின் வறுமை.*
2. *பெற்றோரிடம் கல்வி தொடர்பான விழிப்புணர்வு போதாமை.*
3. *பெற்றோர் மதுபாவனை, குடும்ப முரண்பாடுகள், உறவுகள் இழப்பு, சொத்து இழப்பு என்பவற்றால் உளப்பிரச்சினைக்குட்பட்டிருத் தல்.*
4. *பெற்றோர் இல்லாத, மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்த பிள்ளைகள்.*
5. *பெற்றோரின் செலவு மற்றும் குடும்பம் தொடர்பான திட்டமிடலின் குறைபாடு.*
6. *இளவயதுத் திருமணம்.*
7. *போதிய மருத்துவ வசதியின்மை.*
8. *சிறுவயதில் பிள்ளைகள் வேலைக்கமர்த்தப்படல்.*
9. *குடும்ப முரண்பாடுகள் பிள்ளைகளை உளரீதியான பாதிப்புக்குள்ளாக்குதல்.*
10. *வெளியிடத் தொடர்புகள் குறைவாக உள்ளமை.*

கிராமங்களைப் பொறுத்தவரை மேற் கூறப்பட்டுள்ள பிரச்சினைகள் பொதுவாகவே அதிகமாக காணப்படுகின்றது. இவை இளம் சந்ததியினரின் கற்றல் செயற்பாட்டை நிச்சயமாகப் பாதிக்கும். அதே சமயம் இந்தப் பிரச்சினைகள் அனைத்துமே உடனடியாக தீர்க்கப்படக் கூடியது என்பதும் நடைமுறைக்கு சாத்தியமற்றதுமாகும்.

எனவே இனங் காணப்பட்ட பிரச்சினை களில் தீர்க்கக் கூடியவற்றை இனங்கண்டு, அதற்கேற்ற வகையில் அணுகி செயற்திட்டங் களை மேற்கொள்வதன் மூலம் தான் பிள்ளை களை மீளக் கல்வியில் இணைக்க முடியும்.

**REERDO** நிறுவனம் ஆரம்பித்துள்ள ஒவ்வொரு பிள்ளைகளுக்குமான கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், கிராமங்களை அடிப்படையாக வைத்து பிள்ளைகள் கல்வி தொடர்பாக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் இனங் காணப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பிரச்சினைகளை அணுகுவதற்காக அந்தந்த துறையினரின் ஆலோசனைகளைப் பெற்று திட்டத்தை வடிவமைப்பதற்கான பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர் குடும்ப நலவாழ்வு நிலையம், சாந்திகம், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர்கள், பல்கலைக்கழக நுண்கலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதனூடாக கிராம மட்டத்தில், பாடசாலை மட்டத்தில் அணுகுமுறைக்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு மேற் கொள்ளப்பட்ட திட்டமிடல்கள் செயற்பாடுகளுக்கூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வகையில்திட்டமிடல்கள் என்பன நடைமுறைப்படுத்த பாடசாலை வரவுக் குழுக்களுடன் கிராம மட்டத்தில் ஏழுபேரைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினரையும் உள்ளடக்கி பெற்றோருக்கு கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், சிறு வயதில் தொழிலுக்கு செல்வோரை இனங்கண்டு பாடசாலைக்கு மீண்டும் அனுப்புதல். கிராம மட்டத்தில் இனங் காணப்படும் சமூக உளப் பிரச்சினைகளுக்கு அந்தந்த நிறுவனத்துடன் தொடர்புபடுத்தி பயன் பெறச் செய்தல், பிள்ளைகளுக்கு பாடசாலை தொடர்பான உதவி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளை பெற்றுக் கொடுத்தல் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றது.




ஒட்டுமொத்த செயற்பாடுகளின் வெளிப் பாடாக இடைவிலகிய மாணவர்களை, ஒழுங் கற்ற, பாடசாலை செல்லாத மாணவர் களை மீண்டும் கல்வியில் இணைப்பதே முக்கிய நோக்கமாகும். இந்தச் செயற்திட்டத்துக்கு துறை சார்ந்தவர்கள் ஆலோசனைகளையும், உதவிகளையும் தந்து பாடசாலை மாணவர் களை மீளக் கற்றலில் இணைப்பதற்கு வழி சமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**தி.ஜெயக்குமார்**

# மேலும் 98 சுகாதார தொண்டர்களுக்கு சுத்திகரிப்பு தொழிலாளர் நியமனம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பிராந்தியத்திலுள்ள சுகாதார தொண் டர்களிலிருந்து மேலும் 98 பேருக்கு சுத்திகரிப் புத் தொழிலாளர்களாக நியமனம் வழங்கப்பட வுள்ளது.

இவர்களுக்கான நியமனங்கள் நாளை காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரிவீதியில் அமைந் துள்ள பிரதிமாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதால், அனைவரையும் சமூகமளிக்குமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

தொண்டர்களின் பெயர் விபரம் வருமாறு-

த.ஜெயரஜனி, சி.ராஜகுமாரி, க.பாலகௌரி, வை.சுதாஜினி, த.பாலகௌரி, தி.தமிழ்செல்வி, த.ஜெயந்தினி, கா.அஜந்தினி, த.தஜிதா, சி.நந் தினி, க.கமலினி, து.ஜெயந்தினி, றெ.ராஜி, வ.தனேஸ், லூ.இராஜேஸ்வரி, கெ.விஜயலட் சுமி, க.நிர்மலாதேவி, சி.ஜெசிந்தி, த.தைாஜினி, ஸ்ரீ.ஸ்ரீலவாணி, ம.கமலராணி, சி.பேபிநோசியா, நா.தீபா, செ.ரஜனி, வ.பவளராணி, த.லதாநேசன், க.சாந்தினி, கு.சகாயசீலி, ஜே.மேரி அநெட் யுலிற்றா, த.சசிகுமாரி, சு.ரேகா, மா.சுகிர்தா, இ.நற் குணவதி, கு.லதா, க.கமலாதேவி, ந.இரஞ்சினி தேவி, தி.சர்மிளா, த.கவிதா, த.சசிகலா, ந.புஸ் பராணி, க.விஜயசங்கர், ம.பிரபாகரன், செ.செந் திலழகன், யோ.உஷாஜினி, ந.தட்சாஜினி, செ.ஷாமளா, எ.அஜந்தா, உ.வனித்தா, வே.கலா ரஞ்சினி, மு.ராதிகா, செ.லோறன்ரினா, இ.கௌசலா தேவி, நா.ராகினி, சி.பத்மா, ப.கவிதா, சூ.சந்திரவதனா, சி.சிவனேஸ்வரி, ஜெ.ரவிச்சந் திரன், க.ஜெயந்தி, கா.குணச்சித்திரா, பா.இந்து மதி, செ.விஜயசாந்தினி, இ.வனிதராணி, ந.காந் தார கௌரி, க.யசோதாதேவி, க.புஸ்பமலர், ச.மெரின்சி, மு.கோகுலரஞ்சனி, த. இராஜேஸ் வரி, இ.கலைமதி, இ.மதுமதி, இ.சுவந்தினி, ந.புஸ்பராணி, எஸ்.அனித்தாரஞ்சினி, தே.கிரிச பெல், த.வசந்தகுமாரி, சி.விஜித்தா, க.நாகநந் தினி, தி.நிர்மலா, நி.நித்தியபவிதா, கு.யசோதா, ச.சசிகலா, ஆர்.தவரஞ்சினி, சி.ஜெயந்தி, ச.சகிலா தேவி, க.வதனா, உ.ஜெனித்தா, கி.மகிகரசி, சி.ஜெயப்பிரியா, ஆ.பத்திமா ஜசிந்தா, தி.குல தேவி, த.ஜீவராதா, ர.சுபாசினி, த.ராதிகா, ஸ்ரீ. இந்திராணி, வா.வதனி, ந.சிவசக்தி, சு.சுவர்ணா, அ.சறோஜினி

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
ஊற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்
- திருக்குறள்

## நமது நோக்கு

# இல்லாத ஊருக்கு வழிதேடும் ஜே.வி.பி

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டபின்னர்தான் நடத்தப்படவேண்டும் என்று சர்வகட்சி மாநாட்டில் ஜே.வி.பி வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.

இப்போது சமாதானப் பேச்சு என்ற விடயம் அர்த்தமிழந்து போயிருக்கின்றதென்பது ஒருபுறம் இருக்க - ஜே.வி.பி இல்லாத ஊருக்கு வழி தேடுகிறது என்பதுதான் மூக்கியமானது.

நடைமுறைச் சாத்தியமில்லாத விடயங்களை பேசிப்பேசி நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் நீண்டகாலத்துக்கு ஏமாற்றமுடியாது. சமாதானப் பேச்சு என்ற பெயரில் கடந்த 4 ஆண்டு காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் செய்ததுதான் என்ன?

படைபலப் பெருக்கம், புலிகளை சர்வதேச ரீதியில் ஓரங்கட்டமுயன்றமை, உள்ளூரில் புலிகளைப் பல வீனப்படுத்த எத்தனித்தமை - இவை தவிர, இலங்கை ஆளும் வர்க்கம் சமாதான காலத்தில் வேறெதையும் செய்துவிடவில்லை.

இந்தக் கட்டத்தில் சமாதானப் பேச்சுக்களுக்கு அரசாங்கமே கல்லறை கட்டிவிட்ட நிலையில் - மகிந்தவின் கூட்டாளிகள் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் இனிப்பேச்சு என்று முழக்கமிடுகிறார்கள்.

புலிகள் ஆயுதங்களுடன் பலமான நிலையில் இருக்கின்றபோதே - தமிழ்மக்களை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கின்ற சிங்கள ஆட்சியாளர்கள், அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டால் எப்படியெல்லாம் ஆட்டம் போடுவார்கள் என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியவில்லை.

இன்று புலிகளிடமுள்ள ஆயுதங்கள் என்பது ஈழத் தமிழினத்தின் பாதுகாப்புக் கவசமாக இருக்கிறது. இந்தக் கவசத்தை எப்படியாவது உடைத்துவிட்டால் தமிழினத்தைச் சுலபமாக வீழ்த்திவிடலாம் என்று சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் மனப்பால் குடிக்கின்றன.

ஆயுதங்களுடன் சம பலத்தில் இருக்கிறபோதே தமிழ் மக்களுக்கு ஆகக்குறைந்த தீர்வையோ, அல்லது சுனாமி பொதுக்கட்டமைப்பு போன்ற அதிகாரமில்லாத கட்டமைப்பையோ கூட வழங்கத் திராணியற்ற சிங்கள பேரினவாதத்தை நம்பியா புலிகள் ஆயுதத்தைக் கீழே போடுவார்கள்?

எந்தவொரு உத்தரவாதமும் இல்லாத - தீர்வு ஒன்றும் எட்டப்படாத சூழலில் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் இனி பேச்சு என்று முரண்டுபிடிக்கும் அளவுக்கு ஜே.வி.பி யதார்த்தத்துக்குப் புறம்பான நிலையில் நின்றுகொண்டிருக்கிறது.

புலிகள் மட்டுமன்றி உலகில் எந்தவொரு இயக்கமுமே பேச்சுக்களுக்கு முன்னர் ஆயுதங்களைக் கீழே போடமாட்டா. அப்படிச் செய்யுமளவுக்கு முட்டாள்தனமாக எந்தவொரு இயக்கமும் செயற்படமாட்டாது.

ஒரு காலத்தில் ஆயுதப்புரட்சி நடத்திய ஜே.வி.பிக்கு இந்தத் தத்துவம் புரியாததால்தான் இரண்டு தடவைகள் ஆயுதப்புரட்சியில் தோல்விகண்டு ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களை பலிகொடுத்தது.

யதார்த்தபூர்வமற்ற திட்டங்களும், முயற்சிகளும் - ஜே.வி.பியின் ஆயுதப்புரட்சியை ஆணிவேரோடு அழித்துவிட்டது. இந்த உண்மையை ஜே.வி.பியின் இன்றைய தலைமை இன்னமும் உணரவில்லை என்பதைத்தான் அவர்களின் இந்தக் கருத்து வெளிப்படுத்துகிறது.

அதுசரி, புலிகளை ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்கும் ஜே.வி.பி - தனது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டா அரசியலில் இறங்கியது என்றால் அதுவும் இல்லையே.

எந்தவொரு கருத்தை வெளியிடுவதற்கும் ஒவ்வொருவருக்கும் தகைமை வேண்டும். புலிகளை ஆயுதங்களைக் கீழே போடுமாறு கேட்கும் அருகதை ஜே.வி.பிக்கு கொஞ்சமும் கிடையாது.

ஆனால், மகிந்தவின் குடுமியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும் ஜே.வி.பியின் வாய்வீச்சு ஒருபோதும் அரங்கத்தில் வாய்க்காது. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இரு தூண்களாக இவர்கள் இருந்து கொண்டு நடத்தும் நாடகம் நீண்டகாலத்துக்கு சிங்கள மக்கள் மத்தியிலும், சர்வதேசத்தின் மத்தியிலும் எடுபடாது. ஏனென்றால், காலச்சுழற்சி இப்போது மாறிக்கொண்டிருக்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# திருட்டு சம்பவங்களைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும்!

## பொது மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக இரவுநேரங்களில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள போதும், பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை எனப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மாலை 6 மணிக்கு பின்பு பொது மக்கள் வீதிகளில் நடமாடுவதில்லை. வீதிகளெங்கும் இராணுவத்தினரே கடமையில் ஈடுபடுகின்றனர்.

எனவே, களவுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் எவ்வாறு இராணுவத்தினரிடமிருந்து தப்பிச் செல்கின்றனர் எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை 10 இற்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட கொள்ளைக் கும்பலொன்றால் கச்சேரி - நல்லூர் வீதியில் இருவீடுகளில் பல லட்சம் பெறுமதியான நகைகள் உட்பட பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

அத்துடன், ஆனைக்கோட்டை சந்தியிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்தும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. எனவே, இந்தக் கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அமைப்புகள் உதவ வேண்டுமெனக் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுயாதீன ஆணைக்குழு விவகாரம் நீதிமன்றம் தடைவிதிக்க மறுப்பு!

கொழும்பு —

இலங்கையின் சுயாதீன ஆணைக் குழுக்களின் நியமனங்கள் விடயத்தில் இடைக்காலத்தடை விதிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துள்ளது.

இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான நியமனங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டமை அரசியல் யாப்புக்கு எதிரானது என்று வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.சிறீபவன் தனது தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கினார்.

வழக்குத் தொடர்ந்தோரின் சார்பில் சட்டத்தரணி எல்மொர் பெரேராவும் 6 ஆம் பிரதிவாதியாக குறிக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதியின் சட்டத்தரணி சிறிநாத் பெரேராவும் அரசாங்கத்தின் சார்பில் அரச சட்டத்தரணி நெரின் புள்ளேயும் ஆஜராகினர்.

அரசியல் யாப்புக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நியமனங்களுக்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தோர் வலியுறுத்தினர். ஆனால், இடைக்காலத் தடை விதிக்க நீதிபதி கே.சிறீபவன் மறுத்துத் தீர்ப்பளித்தார்.

# மூச்சுவிடக் காற்று வருமா?

## வாசகர் நோக்கு

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை சாலைப் பேரூந்துகளில் பிரயாணம் செய்யும் மக்களில் பெரும்பாலானோர் மனதுக்குள் குமைந்து கொள்ளும் விடயமொன்றை இந்தப் பகுதியில் வெளிக்கொணர விரும்புகிறேன். அதாவது -

நாட்டின் சுமுகமற்ற சூழ்நிலைகளாலும், பாதுகாப்புக் கெடுபிடிகளாலும் வலுவிழுந்து, வாடிப்போயிருக்கின்ற மக்கள் தமது உறவினரைத் தேடியும், தமது தொழிலிடங்களை நாடியும் தினமும் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர். காலநிலையும் இப்பொழுது மிகவும் வெப்பமானதாக உள்ளது.

சாதாரணமாக இரண்டு பேரூந்தில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் - ஒரு பேரூந்தில் செல்கின்ற நிலையே இப்பொழுது காணப்படுகிறது. இந்த நிலையில் பேரூந்தில் ஏறும் பயணிகளை கிழங்குகளை அடுக்குவது போல அடுக்குகின்ற நடத்துநர்கள் மிகவும் சாதுரியமானவர்களே. ஆனால், பயணிகள் மூச்சு விடுவதற்கு முடியாமல் தவிக்கின்ற போது யன்னல்களைக் கூடத் திறப்பதற்கு முடியாதுள்ளது.

பெரும்பாலான பேரூந்துகளில் இதே நிலைதான். ஒரு கண்ணாடி யன்னலை, மூவர்கூடச் சேர்ந்து தள்ளுகின்ற நிலை காணப்படுகிறது. தயவுசெய்து இந்த நிலையை சாலை நிர்வாகத்தினர் மாற்றி உதவுவார்களா? யன்னலூடாகக் காற்று வருமா?

*சி.மாதவன், பருத்தித்துறை*

# அடிக்கல் நாட்டு விழா

வடமராட்சி —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி, தும்பளை கிழக்கு கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் மற்றும் மீன்சந்தை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுனாமிக்கான மேலதிக அரச அதிபர் செந்தில் நந்தனன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் வரதீஸ்வரன், நெக்டப் பிரதேச செயலர் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நெக்டப் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் இந்த மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர்களுக்குள்ள உரிமைகளை இலங்கை அரசு மதிக்க வேண்டும்

## என்கிறார் றிச்சட் பௌச்சர்

கொழும்பு—

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தாம் வாழ்கின்ற பிரதேசங்களை தாங்களே நிர்வகிக்கும் சூழல் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலர் றிச்சட் பௌச்சர் தெரிவித்தார்.


கொழும்பிலுள்ள தனியார் ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு மனித உரிமை போன்று கலாசார உரிமையும் உண்டு என்பதை இலங்கை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாயின் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஜெனிவா பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதற்கு அமைய செயற்பட்டு - அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றுக்கு வர வேண்டும். இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி தமக்குத் தேவையான இலக்கை அடைய முயற்சிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழ்மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கு சகல உரிமையும் இருக்கிறது. அவர்களது உரிமைகளுக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டும்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இரண்டு தரப்பும் சம அரசியல் உரிமைகளும் சம வாய்ப்புக்களும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது கடமையாகும்.



இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளின்படி தன்னாட்சி அதிகாரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டது.

அதன்படியே தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க கடற்படை அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு ரகசிய விஜயம்

கொழும்பு—

அமெரிக்க கடற்படை அதிகாரிகள் இருவர் யாழ். குடாநாட்டுக்கான இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட விமானம் மூலம் பலாலி படைத்தளத்துக்குச் சென்ற இவர்கள் - சிறப்புப் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புடன் காங்கேசன்துறை மற்றும் காரைநகர் கடற்படைத் தளங்களுக்கு சென்றனர்.

இவர்கள் அங்கு கடற்படையினரின் பாதுகாப்பு நிலைகளை நேரில் பார்வையிட்டதுடன், கடற்படை அதிகாரிகளையும் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அத்துடன், கடந்த மாதம் வெற்றிலைக்கேணியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடற்சமர் குறித்தும் படையதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

# வலய ரீதியான அதிகார பரவலாக்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் திட்டம்!

கொழும்பு—

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வலய ரீதியான அதிகாரப் பரவலாக்கம் ஒன்றையே அரசாங்கம் முன்வைக்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. இனப்பிரச்சினையைத் தீர்க்க புதிய முறையிலான தீர்வு ஒன்றை முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்து வருகிறார்.

இதன் அடிப்படையில் தற்போதைய மாகாண முறைகளுக்கு மாற்றாக ஐந்து பிரிவான வலயமுறை கொண்டு வரப்பட்டு, பொலிஸ் அதிகாரங்களும் அவற்றுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வலயத்தின் முதலமைச்சர் ஜனாதிபதிக்கு மட்டுமே பதில் சொல்லக் கூடியவராக இருப்பார் என்ற யோசனையும் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் என்ற அடிப்படையில் வடக்கு- கிழக்கு வலயத்துக்கு பொலிஸ் அதிகாரங்களுடன் மேலதிக அதிகாரங்களும் வழங்கப்படும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சர்வகட்சி கூட்டத்தின் தீர்மானப்படி நியமிக்கப்பட்டுள்ள குழுவின் யோசனைகளுக்குப் பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதி யோசனை முன்வைக்கப்படும் என அரச தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (01)

# அமைச்சரவை மாற்றம் அல்லது பொதுத்தேர்தல் குறித்து ஆராய்வு

கொழும்பு—

அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்வது அல்லது பொதுத்தேர்தலை நடத்துவதென அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அமைச்சரவை மாற்றங்களின்படி ஜே.வி.பியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கும் அமைச்சரவையில் இடம் வழங்கப்படவுள்ளது. எனினும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாக இதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன.

புதிய கட்சிகளை அமைச்சரவையில் இணைத்துக் கொள்வதற்காக சில அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேலதிக பொறுப்புக்களும் மீளப்பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தமாத இறுதிக்குள் அமைச்சரவை மாற்றங்களை மேற்கொள்ள முடியாவிட்டால் - மீண்டும் ஒரு பொதுத்தேர்தலுக்குச் செல்லவும் அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் தற்போதைய நாடாளுமன்ற பெரும்பான்மை போதுமானதாக இல்லை என்ற அடிப்படையிலேயே இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதன் மூலமே ஜனாதிபதியின் புதிய அதிகார பரவலாக்கலுக்கு அங்கீகாரத்தைப் பெறமுடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டே பொதுத் தேர்தல் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (01)

# வரியின்றி வாகன கொள்வனவு எம்.பிக்களுக்கு வங்கிக் கடன்

கொழும்பு—

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியின்றி வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு வங்கிக் கடன்களை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இது தொடர்பாக கடந்த வாரம் கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களும் 35லட்சம் ரூபா பெறுமதியான வரியற்ற வாகனங்களை கொள்வனவு செய்ய முடியும். இவர்கள் வங்கிகளில் இதற்கான கடன்களை ஈடு என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கடன்களை செலுத்தாவிடின் கொள்வனவு செய்த வாகனங்களை கடன்வழங்கிய வங்கி தமதாக்கிக் கொள்ளும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (01)

# மட்டக்களப்பில் கிளைமோர்; இராணுவச் சிப்பாய் படுகாயம்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - மாவடிவேம்பு மருங்கையடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வீதிப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 9.15 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் - எ.பி.செனவிரட்ண (வயது 43) என்ற இராணுவச் சிப்பாய் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்துக்கு முன்பாக வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதலொன்று நடத்தப்பட்ட போதும் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலையடுத்து மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்கான போக்குவரத்தும், கல்முனையில் இருந்து மட்டக்களப்புக்கான போக்குவரத்தும் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டதாகவும் - இதனால், உயர்தரப் பரீட்சைக்கு தோற்றச் சென்ற மாணவர்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

## இ.போ.ச...

மோகுலன் (வயது 24) என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இனப்பிரச்சினைக்கு...

இதனைச் சர்வதேச சமூகத்துக்கு இறுதியாக எடுத்துச் சொல்லவே நாங்கள் ஒஸ்லோவுக்குச் செல்கிறோம்.

தென்னிலங்கையில் காலம் காலமாக குழுக்கள் அமைப்பது, மாநாடுகள் கூட்டுவது போன்ற நிகழ்வுகள் அடிக்கடி நடைபெற்றுள்ளன.

ஆனால், இவை எதுவும் உருப்படியான எந்தவிதமான தீர்வையும் தந்ததில்லை. அது போலவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தற்போது அமைக்கப்படும் இரண்டு குழுக்களும் எந்தவிதமான தீர்வையும் தரப்போவதில்லை.

இந்தக் குழுக்களிலும், அவை குறித்த கூட்டங்களிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இணைக்கப்படாமை- தென்னிலங்கையும், தமிழீழமும் இரு துருவங்களாகப் பிரிந்து விட்டன என்பதையே தெளிவாகக் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை....

இந்தியா-இலங்கையின் சமாதான முயற்சிக்கு தனது பூரணமான ஆதரவை வழங்கும். ஆனால், தற்போதைய சூழலில் - இந்தியா தலையிட்டு நிலைமையை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிடாமைக்கு இன ரீதியானதும், இலங்கை அமைந்துள்ள சூழலுமே காரணமாகும்.

இந்தப் பிரச்சினையில் இந்தியா ஆதரவாகவோ அல்லது தலையிட்டாலோ பிரச்சினை தீர்க்கப்படுவதற்குப் பதிலாக மேலும் சிக்கலடையுமென இந்தியா நம்புகிறது. எனவே, இந்தியா சமாதான முயற்சிகளில் தலையிடாமல் அதற்குதனது ஆதரவை முழுமையாக வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலும் 203 அகதிகள் தமிழகம் சென்றனர்

இராமேஸ்வரம்—

இலங்கையிலிருந்து மேலும் 203 அகதிகள் நேற்றும் தமிழகம் சென்றடைந்தனர். 56 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரே தமிழகம் சென்றனர். இவர்கள் திருகோணமலை மாவட்டம் திருக்கடலூரைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் தமிழக பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து தமிழகம் சென்றுள்ள அகதிகளின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 333 ஆக அதிகரித்துள்ளது.

## நாகர்...

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக படைத்தகவல்கள் தெரிவித்தன.

# அவசரமாகத் தரையிறக்கப்பட்ட தாய்லாந்து பயணிகள் விமானம்!

கொழும்பு—

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து பாங்கொக் நோக்கிப் புறப்பட்ட தாய்லாந்து பயணிகள் விமானம் அவசரமாக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரண்டு தடவைகள் தரையிறக்கப்பட்டது.

ஏயாபஸ் ஏ-330 என்ற இந்தத் தாய்லாந்து விமானம் - 225 பயணிகளை ஏற்றிக் கொண்டு பாங்கொக் புறப்பட்ட சிறிது நேரத்தில் விமான ஓட்டிகளால் தறையிறக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தின் இயந்திரப் பகுதியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாகவே விமானத்தை அவசரமாகத் தரையிறக்குவதற்கு விமான ஓட்டிகள் முடிவெடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விமானத்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் விமானத்தள விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். விமானம் திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

# தனிப்பட்ட பாதுகாப்புத் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு—


தமது தனிப்பட்ட பாதுகாப்புத் தொடர்பில் மக்கள் அனைவரும் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளதாவது -

இலங்கையின் எந்தப் பகுதியிலும் தற்போது பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுப்பதற்கு பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அண்மையில் மொனராகலவில் அதிசக்திவாய்ந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டமைக்கு பொதுமக்களின் விழிப்பான செயற்பாடே காரணமாகும். இதற்கு பொதுமக்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், இதன் மூலம் பேரழிவொன்றும் தடுக்கப்பட்டது.

சந்தேகத்துக்கிடமான வகையில் எவராவது நடமாடினாலோ அல்லது பொருட்கள் ஏதாவது இருந்தாலோ பொது மக்கள் - படையினர் மற்றும் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.



இப்பத்திரிகை இல.26?7, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.